**செய்தி வெளியீடு எண்: 328** **நாள் :08.07.2015**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி நடைபெற்ற மீன்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தான இரண்டு நாள் ஆய்வுக் கூட்டத்தின் முதல் நாளான இன்று (08.07.2015) மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு K.A.ஜெயபால் அவர்கள் மீன்வளத்துறையின் பொறியியல் பிரிவு மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பணி முன்னேற்றத்தினை ஆய்வு செய்தார்.

மீன்வளத்துறையின் பொறியியல் பிரிவின் மூலம் மத்திய, மாநில அரசுகள், நபார்டு, தேசிய மீள்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் ரூ 508.18 கோடி மதிப்பிலான பல்வேறு மீன்பிடித் துறைமுகங்கள் கட்டுமானம் மற்றும் தரம் உயர்த்துதல், மீன் இறங்கு தளங்கள் கட்டுதல், முகத்துவாரங்களை நிலைப்படுத்துதல், மீன் பண்ணைகள் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

கட்டுமான பணியின் பல்வேறு நிலைகளிலுமுள்ள மேற்காணும் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பணிகளை விரைந்து முடித்து அவற்றை மீனவர்களின் பயன்பாட்டிற்கு விரைவில் அளித்திட தக்க அறிவுரைகளை வழங்கியதுடன் பணிகளை சிறப்பாக செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

மீன்வளத்துறையின் மாநாட்டு கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, அரசுச் செயலர், முனைவர் ச.விஜயகுமார், இ.ஆ.ப, மீன்துறை

ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப, மீன்வளத்துறையின் பொறியியல் பிரிவு தலைமை பொறியாளர் (கூ/பொ.), தலைமை அலுவலக மீன்துறை கூடுதல் இயக்குநர்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் மீன்பிடித் துறைமுக திட்டங்கள் கோட்ட செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், மண்டல மீன்துறை இணை / துணை இயக்குநர்கள், உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

மீன்துறை ஆணையருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**